# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.319/2024

dated : 26.02.2026

P.W.1

Name சுப்பையா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதி வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறார். வேலை ஏதும் செய்யவில்லை. 2ம் வாதி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று இரயில்வேயில் பணிபுரிகிறார். 2ம் வாதியின் மனைவி காவல் துறையில் பணிபுரிகிறார். வாதிகள் மூன்று பிரதிவாதிகள் மீது வழக்கு போட்டுள்ளார்கள். 394/1 என்ற புல எண்ணில் 6 ஏக்கர் 92 செண்ட் சொத்தாகும். அதன் வடக்கே அரசு புறம்போக்கு நிலமும், மேற்கிலும், தெற்கிலும் ஓடையும், கிழக்கு அழகர்சாமி நாயக்கர் புஞ்சையும் உள்ளது. 393 என்ற புல எண்ணில் 1 ஏக்கர் 43 செண்ட் உள்ளது. அதுவும் முதல் சொத்து ஒட்டியே உள்ளது அதற்கு மால் தெரியாது. ஆதியில் எல்லப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் அவர் 2006 ல் இறந்துபோனார். மேற்படி சொத்திற்கு அருகில் எனக்கும் கிணற்றுடன் கூடிய நிலம் உள்ளது. என்னுடைய இடத்தின் புல எண்.417/1சி அது என் தந்தையின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. வாதியின் தாயார் மாரியம்மாள் 2021ம் ஆண்டு நோய்தொற்றால் இறந்துபோனார். அவருக்கு போதிய படிப்பறிவு உண்டு என்றால் சரியல்ல. அவர்

தெளிவான சிந்தனையுடனும் நல்ல உடல் நிலையுடனும் இருந்து வந்தார். எல்லப்பநாயக்கர் உயிருடன் இருந்தபோதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அசையும் சொத்துக்களை பெண் மக்களுக்கும், அசையா சொத்துக்களை அவரது மனைவி மாரியம்மாளுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்குரை சொத்து சம்பந்தமாக நிறுவன சட்டத்தின் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியாது. மாரியம்மாள் வழக்கு சொத்து தொடர்பாக அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்த விவரமும் எனக்கு தெரியாது. 1968 ல் எல்லப்பநாயக்கர் கிரையம் பெற்ற சொத்தாகும். வழக்குரை சொத்து உட்பட வேறு சில சொத்துக்களையும் 01.04.2008 அன்று மாரியம்மாள் தனது அதிகார முகவர் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. கூட்டாக அனுபவிப்பதாக சொல்லியிருக்கிறேன். கூட்டாக அனுபவித்தபோது அதில் உளுந்து பயிரிட்டிருந்தார்கள். உளுந்து பயிரிட்டிருந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. பயிர் அடங்கல் கணக்கு எனக்கு தெரியாது. கனகராஜ் எனக்க மைத்துனர் முறை பக்கத்து வீட்டுக்காரர். 2008 முதல் 1ம்பிரதிவாதி நிறுவனம்தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அந்த நிறுவனம் யார் யாருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

வாதிகள் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. 3 பிரதிவாதிகளில் மற்ற இரண்டு பேர் யார் என்று தெரியாது. 1ம் பிரதிவாதியை மட்டும் தெரியும். வழக்குரை சொத்து ஆதிமுதலே எல்லப்ப நாயக்கரால் மாரியம்மாளுக்கு ஒதுக்கப்பட்டு அதை மாரியம்மாள் தனித்து அனுபவித்து வந்து 2008 ம் ஆண்டு அதிகார முகவர் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும் எனவே அந்த சொத்து 2008 முதல் பிரதிவாதியின் தனித்த அனுபவித்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1, 2 வாதிகள் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் அவர்களடன் வேறு யார் யார் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. 2 ம் வாதி அவ்வப்போது ஆண்டுக்கு ஒருமுறை ஊருக்கு வந்துவிடுவார் சுபதுக்க நிகழ்வுகளில் கலந்து கொள்வார். கடந்த 6 மாதத்திற்கு முன்புவரை 1ம் வாதி வழக்கு சொத்து அமைந்த ஊரில்தான் இருந்தார். கடந்த 6 மாதத்திற்கு முன்பு உடல் நிலை சரியில்லாததால் வேறு இடத்தில் சொந்த வீடு வாங்கி சென்றுவிட்டார். 1ம் பிரதிவாதி பெயரில் 2008ம் ஆண்டு பட்டா ஏற்பட்டதை வாதிகள் யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி ஆட்சேபனை செய்தாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு அழைப்பாணை வரவில்லை வாதிகள் அழைத்ததன் பேரில் நீதிமன்றம் ஆஜரானேன். வழக்குரைச் சொத்தின் அருகில் எனக்கு சொத்துக்கள் உள்ளது என்று கூறுவதும் வழக்குரைச் சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்று கூறுவதும் வழக்கிற்காக கூறும் பொய் என்றால்

சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.26 17:53:35 +0530